*2023 அக்டோபர் 11]* [திரு. தி. வேல்முருகன்]
*நீங்கள் அனுமதி அளிக்கக் கூடாது. (மணியடிக்கப்பெற்றது) அப்படி அவர்களுக்கு கொடுத்தால் சமூக நீதியை நிலைநாட்டுகின்ற எங்களைப் போன்ற இயக்கங்களுக்கும். . .*

## 7. இஸ்ரேல் போர், தமிழகத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்த முதலமைச்சருக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் நன்றாக பேசிவிட்டீர்களே! நானும் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டிலே நடக்கிற பிரச்சினைகளை எல்லோரும் அறிவோம். ஒரு போர் சூழல். தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் அங்கிருந்து என்னை தொலைபேசியிலே தொடர்பு கொண்டார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலேயே அந்தக் குறிப்புகளை கொடுத்தேன். அந்த 7 பேரைச் சேர்த்து, மொத்தமாக தமிழகத்தைச் சார்ந்தோர் எத்தனையோ பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எடுத்திருக்கிறார். அந்தவகையிலே நான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

## 8. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. கு. செல்வபெருந்தகை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 106 முதல் 155 வரையிலான 50 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*